අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

Ministry of Education, Higher Education and Vocational Education

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்விக் கிளை

க.பொ.த சா / த முன்னோடி மாதிரி வினாப்பத்திரம் - 2026

G.C.E. O/L Pre- Model Question Paper – 2026

கத்தோலிக்க திருமறை	14 | T | 1&11	மூன்று மணித்தியாலம்

மாதிரி வினாப்பத்திரம் -2

அறிவுறுத்தல் :

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

பகுதி – 1

1. திருவிவிலியம் எழுதப்பட்ட காலப்பகுதி

i. கி.மு 100 – கி.பி 950
ii. கி.பி 100 – கி.பி 950
iii. கி.மு 950 – கி.பி 100
iv. கி.மு 950 – கி.மு 950

2. புதிய ஏற்பாட்டில் பொதுத் திருமுகங்களை எழுதிய சீடர்களாவன

i. யாக்கோபு , பேதுரு , யோவான் , யூதா
ii. யாக்கோபு , பேதுரு , பவுலடியார் , யோவான்
iii. பேதுரு , யோவான் , பவுல் , யூதா
iv. பேதுரு , யோவான் , திமோத்தேயு , யூதா

3. பவுலடியார் சிறைப்பட்டிருந்த போது தனிநபருக்கு எழுதிய திருமுகம்

i. திமோத்தேயு
ii. தீத்து
iii. பிலமோன்
iv. 2திமோத்தேயு

4. திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியர்

i. பேதுரு
ii. யோவான்
iii. யாக்கோபு
iv. பவுல்

Past Papers Wiki

5. இயேசு பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை சீடருக்கு வழங்கியது

i. சிலுவை மரத்தில் தொங்கிய போது
ii. பாஸ்கா ஞாயிறன்று மாலையில்
iii. அப்பங்களை ஆசீர்வதித்த போது
iv. எம்மாவுஸ் பயணத்தின் போது

6. சீடர்கள் உட்பட மரியாள் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டது இயேசு விண்ணேற்பு அடைந்து எத்தனையாம் நாள்

i. 40 நாட்கள் ii. 50 நாட்கள் iii. 10 நாட்கள் iv. 20 நாட்கள்

7. புனித பவுலின் முதலாவது மறைதூதுப் பயணத்தில் இணைந்து கொண்டவர்கள்

i. லூக்காவும் பேதுருவும்
ii. யோவானும் மாற்குவும்
iii. பர்னபாவும் யோவான் மாற்குவும்
iv. பேதுருவும் மத்தேயுவும்

8. செபதேயுவின் மக்கள் இருவரும்

i. யோவானும் யாக்கோபும்
ii. பேதுருவும் யோவானும்
iii. பேதுருவும் அந்திரேயாவும்
iv. யோவானும் அந்திரேயாவும்

9. கத்தோலிக்க திருவழிபாட்டின் ஊற்றும் உச்சியும் நற்கருணையே இதற்கு காரணம்

i. இயேசு ஏற்படுத்தியமையால்
ii. எமது ஆன்மீக உணவு ஆகையால்
iii. இயேசுவின் திருவுடல் ஆகையால்
iv. கிறிஸ்து நற்கருணையில் உயிருடன் வாழ்கின்றமையால்

10. யூதப் பாஸ்கா விழாவில் முக்கியம் பெற்றவை

i. பாஸ்கா செம்மறி, புளித்த அப்பம் , கசப்புக் கீரை, திராட்சை இரசம்
ii. பாஸ்கா செம்மறி , புளித்த அப்பம் , மன்னா , திராட்சை இரசம்
iii. பாஸ்கா செம்மறி , புளியாத அப்பம் , கசப்புக் கீரை, திராட்சை இரசம்
iv. பாஸ்கா செம்மறி , புளியாத அப்பம் , மன்னா , திராட்சை இரசம்

11. இறுதித் தீர்ப்பின் போது கிறிஸ்து இயேசு நம்மை அளக்கும் அளவுகோல்

i. உடலைச் சார்ந்த நற்செயல்கள்
ii. நற் கிரிகைகள்
iii. ஆன்மீகச் செயல்கள்
iv. கருணையான செயல்கள்

12. 1995 ஜனவரி 21 திகதி புனித யோசவாஸ் அடிகளாரை அருளாளர் நிலைக்கு உயர்த்திய திருத்தந்தை யார்?

i. திருத்தந்தை X111 ம் லியோ
ii. திருத்தந்தை XIV ம் லியோ
iii. திருத்தந்தை X ம் பத்திநாதர்
iv. திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்

13. 1ம் கட்டளை எவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது

i. நம்பிக்கை , எதிர்நோக்கு , அன்பு
ii. நம்பிக்கை, இறைவிருப்பம் , அன்பு
iii. நம்பிக்கை , இறைபராமரிப்பு , அன்பு
iv. நம்பிக்கை , எதிர்நோக்கு , இரக்கம்

14. " பிள்ளாய் உன் தந்தை தந்த நற்பயிற்சிகளைக் கடைப்பிடி : உன் தாய் கற்பிப்பதை தள்ளி விடாதே " இவ்வாறு கூறப்பட்டிருப்பது

i. எபேசியர் திருமுகத்தில்
ii. கொலோசையர் திருமுகத்தில்
iii. நீதிமொழிகள் நூலில்
iv. சபை உரையாளரில்

15. A - திருவிவிலியத்தை வாசித்தல்
B - கல்வி நடவடிக்கைகளில் பங்கெடுத்தல்
C - செபித்தல்
D - திருப்பலியில் பங்கு கொள்ளல்
E - இறைவார்த்தைக்குச் செவிமடுத்தல்
F - அருளடையாளங்களைப் பெற்றக் கொள்ளல்

நல்லொழுக்கமுள்ளவர்களாக வாழ செய்ய வேண்டியவை

i. A, B, C, D
ii. A, B, C, F
iii. A, C, D, E,
iv. A, C, D, F

16. இறைவன் மனிதனுக்கு அளித்த சொத்துக்களை நீதியான முறையில் பயன்படுத்துவதன் மூலம்

i. இறைவனின் கருணையைப் பெற முடியும்
ii. இறைவனின் அன்பைப் பெற முடியும்
iii. இறைவனின் இரக்கத்தைப் பெறமுடியும்
iv. இறைவனின் ஆசீரைப் பெறமுடியும்

17. உண்மையை மறைத்து பாவச் செயல் புரிந்ததை எடுத்துக் காட்டும் கதை

i. இரக்கமுள்ள தந்தையின் கதை
ii. அனனியா சபிரா கதை
iii. சக்கேயுவின் கதை
iv. லேவியின் அழைப்பு

18. கிறிஸ்து அரசராக எருசலேமுக்கு வருகை தந்ததை நினைவு கூரும் நாள்

i. பெரிய வியாழன்
ii. பெரிய வெள்ளி
iii. குருத்தோலை ஞாயிறு
iv. பாஸ்கா ஞாயிறு

19. உன்னத குருவின் வேண்டலின் பிரதான கருத்து

i. ஒற்றுமை
ii. மன்னிப்பு
iii. இறைவேண்டுதல்
iv. அமைதி

20.இ யேசுவுடன் கெத்சமனிக்குச் செபிக்கச் சென்ற சீடர்கள்

i. பேதுரு , பவுல் , யோவான்
ii. பேதுரு , யாக்கோபு , யோவான்
iii. பேதுரு . பவுல் , பிலிப்பு
iv. பேதுரு, மத்தேயு , யோவான்

21. இறைவன் மனிதனை விட மேன்மையும் மகத்துவமும் மிக்கவராகக் காட்டும் பாரம்பரியம்

i. யாவே
ii. எலோகிம்
iii. இணைச்சட்டம்
iv. குருக்கள்

22. 'செப்துவாஜிந்' என்பதன் பொருள்

i. LXX - எழுபது ii. L - ஐம்பது iii. LXXX - எண்பது iv. LX – அறுபது

23. "சிறு பிள்ளை நான் என்று சொல்லாதே . யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகிறேனோ அவர்களிடம் செல். " இவ்வாறு கூறப்பட்ட இறைவாக்கினர்

i. எசாயா ii. எரேமியா iii. எசேக்கியேல் iv. ஓசேயா

24. தொடக்க நூல் முதலாம் அதிகாரம் தொடக்கம் பதினொராம் அதிகாரம் வரை அழைக்கப்படுவது.

i. மீட்பு வரலாறு ii. புராதன வரலாறு
iii. யூதா வரலாறு iv. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

25. A - அவர் நீதிமான் B - அவர் இனங்களின் தந்தை
C - அவரின் பரம்பரையில் அவரே குற்றமற்றவர் D - அவர் தெரிந்து கொண்ட தலைவர்
E - அவர் இறைவனோடு நல்லுறவை வளர்த்திருந்தார்.

நோவா இறைவனின் அழைப்பைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக அமைந்த காரணிகள்

i. A, D, E ii. A, B, E iii. A, B, C iv. A, C, E

26. திருமுழுக்கு யோவான் தமது தூதுரைப் பணியை ஆரம்பித்த இடம்

i. கலிலேயாக் கடலருகில் ii. யூதேயாப் பிரதேசத்தில்
iii. யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதியில் iv. சமாரியாப் பிரதேசத்தில்

27. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் ……..

i. மகிமையின் மக்கள் எனப்படுவர் ii. இரக்கத்தைப் பெறுவர்
iii. மகிழ்ச்சி அடைவர் iv. கடவுளைக் காண்பர்

28. குணமளிக்கும் அருளடையாளங்களாவன

i. நோயில் பூசுதல் , குருத்துவம் ii. நோயில் பூசுதல் , ஒப்புரவு
iii. ஒப்புரவு , குருத்துவம் iv. ஒப்புரவு , திருமணம்

29. கத்தோலிக்க திருமணத்தின் பண்புகளாவன

i. ஒருமை , கட்டவிழாமை ii. நம்பிக்கை ,ஒத்துழைப்பு
iii. அன்பு , நம்பிக்கை iv. நம்பிக்கை , புரிந்து கொள்ளல்

30. 'பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் , மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசு' இவ்வாறு கூறப்பட்டிருப்பது

i. எசாயா நூலில் ii. திருப்பாடல் நூலில் iii. யோபு நூலில் iv. நீதிமொழிகள் நூலில்

31. வனத்துப்பிதாக்கள் என அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர்

i. தர்சு சின்னப்பர் ii. கலிலேயா பேதுரு iii. தேப்ஸ் சின்னப்பர் iv. அரிமத்தியா ஊர் யோசேப்பு

32. 'பிராங் டப்' என்பவரால் பொதுநிலையினருக்காக ஆரம்பிக்கப்பட்ட மறைதூது இயக்கம்

i. திரு இருதய சபை ii. திருப்பாலத்துவ சபை
iii. மரியாயின் சேனை iv. இளம் கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

33. " பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் : அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்" இவ்வாறு கூறப்பட்டது

i. ஆபிரகாம் ,சாராவிற்கு ii. ஆதாம் , ஏவாளுக்கு
iii. ஈசாக் ரெபேக்காவிற்கு iv. யாக்கோபு , ராகேலிற்கு

34. பழைய ஏற்பாட்டில் 'சமாதானம்' என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல்

i. ஷமார் ii. அபாத் iii. ரதா iv. ஷாலோம்

35. கிறிஸ்தவ பக்தியிலும் நம்பிக்கையிலும் வாழும் கிறிஸ்தவனுக்குள்ள கடமைகளில் ஒன்றாக இருப்பது

i. சபாத் நாளில் நற்செயல்களில் ஈடுபடுவது
ii. ஒரு சந்தி நாட்களில் சுத்த போசனம் அனுசரிப்பது
iii. திருப்பலியில் பங்கெடுத்து சுத்த போசனம் அனுசரித்தல்
iv. ஒரு சந்தியிருத்தலும் களவு செய்யாதிருத்தலும்

36. ' விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள மானிட மகனைத் தவிர வேறு எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை' இவ்வாறு குறிப்பிடும் நற்செய்தியாளர்

i. புனித மத்தேயு ii. புனித மாற்கு iii. புனித லூக்கா iv. புனித யோவான்

37. மரியன்னை விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதற்கு முக்கிய காரணம்

i. பாவத்தை விலக்கி நல்வாழ்வு வாழ்ந்தமை ii. இயேசுவின் தாய் ஆகையால்

iii. தேவ அன்னை ஆதலால் iv. இறை வல்லமையைப் பெற்றமையால்

38. 1858 பெப்ரவரி மாதம் 11திகதி பிரான்ஸ் லூர்து நகரில் மரியன்னை யாருக்கு காட்சியளித்தார்

i. பிரான்சிஸிற்கு ii. ஜசிந்தாவிற்கு iii. பெர்னடேத்திற்கு iv. லூசியாவிற்கு

39. திருப்புகழ்மாலையின் புகழ்ச்சிப்பாடல்கள் எந்நற்செய்திகளிலிருந்து எடுக்கப்படுகின்றன

i. லூக்கா நற்செய்திலிருந்து ii. மத்தேயு நற்செய்திலிருந்து

iii. மாற்கு நற்செய்தியிலிருந்து iv. யோவான் நற்செய்தியிலிருந்து

Past Papers Wiki

40. கத்தோலிக்கராகிய எமது தியானத்திற்கு மிகவும் அடித்தளமாக இருப்பது

i. இறைவார்த்தைகள் அடங்கிய திருவிவிலியம் ii. பசான் பாடல்கள்

iii. செபப் புத்தகம்

iv. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல்

பகுதி – 11

முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

1. ஞானம் பற்றிய போதனைகள் முன்வைக்கப்பட்டுள்ள இலக்கிய அமைப்புக்கள் இரண்டு தருக.

2. புனித பவுல் மறைதூதுப் பயணங்களின் போது எதிர்கொண்ட சவால்கள் இரண்டு தருக.

3. இயேசு பெரிய வியாழனன்று திவ்விய நற்கருணையை ஏற்படுத்திய நிகழ்வைக் குறிப்பிடும் நற்செய்தியாளர்கள் இருவரைக் குறிப்பிடுக

4. தூய மக்ஸிமிலியன் கோல்பே அடிகளார் நிலவறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது செய்த செயல்கள் 2 தருக

5. பொதுக்காலத்தில் கொண்டாடப்படும் முக்கியமான விழாக்கள் 2 தருக.

6. மாற்கு மற்றும் யோவான் நற்செய்தியாளர்களின் அடையாளங்களைப் பெயரிடுக

7. 3ம் , 6ம் பெருந்துண்பங்களை எழுதுக.

8. இயேசுவின் வாழ்வில் தூய ஆவியானவர் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக.

9. ஆன்மீக , இரக்கச் செயல்கள் இரண்டு எழுதுக.

10. திருப்புகழ் மாலையில் காலை , மாலை வேளைகளில் செபிக்கப்படும் புகழ்ச்சிப்பாக்கள் இரண்டு தருக.

2) 1. அருட்பணி யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் பங்களிப்புச் செய்த துறைகள் 2 தருக

2. ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைக்கு வந்த கத்தோலிக்க மறைபரப்புச் சபைகள் 3 தருக.

3. உமது பங்கில் மறையறிவை வளர்ப்பதற்கு உம்மால் செய்யக்கூடிய செயல்கள் 5ஐ எழுதி விளக்குக.

3) 1. முதலாம் மூன்றாம் கட்டளைகளை எழுதுக

2. திருப்பலி ஒப்புக் கொடுப்பதன் நோக்கங்கள் மூன்று தருக

3. ஞாயிறு தினத்தை தூய்மையாகக் கடைப்பிடிப்பதற்கு உமது குடும்ப உறுப்பினர்கள் செயற்படும் முறையை 5 காரணிகளினூடாக விளக்குக.

4) 1. இறைவழிபாட்டின் பிரதான பகுதிகள் இரண்டையும் பெயரிடுக

2. திருவழிபாட்டு ஆண்டின் காலச்சக்கரத்தின் காலங்கள் மூன்றைக் குறிப்பிடுக

3. நத்தார் காலங்களில் சொல்லக்கூடிய விசுவாசிகளின் மன்றாட்டுக்கள் 5 எழுதுக.

5) 1. மறைமாவட்டக் குருக்களின் வார்த்தைப்பாடுகள் இரண்டையும் தருக.

2. திருத்தொண்டர்களின் கடமைகள் 3 தருக

3. பாடசாலை மாணவன் மாணவி என்ற முறையில் குருக்கள் மட்டில் உமக்குள் கடமைகள் 5ஐ எழுதி விளக்குக

6) 1. உமது பங்கிலுள்ள பொது நிலையினரின் பக்திச் சபைகள் 2 தருக.

2. மரியாயின் சேனையினரால் மேற்கொள்ளப்படும் பணிகள் மூன்று தருக.

3. மரியாளின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக் கொள்ளும் முன்மாதிரிகைகள் 5ஐ எழுதி விளக்குக.

7) விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. பெந்தகோஸ்து தினம்

2. புனித அன்னை திரேசா

3. திருச்சபையின் சட்டங்கள்

4. இயேசுவின் புதுமைகள்

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

Ministry of Education, Higher Education and Vocational Education

சமயங்கள் மற்றும் விழுமியக் கல்விக் கிளை

க.பொ.த சா / த முன்னோடி மாதிரி வினாப்பத்திரம் - 2026

G.C.E. O/L Pre- Model Question Paper – 2026

கத்தோலிக்க திருமறை

14	T	1&11

மாதிரி வினாப்பத்திரம் -2

விடைகள்

வினா இல.	விடை	பக்க இல.	வினா இல.	விடை	பக்க இல.	வினா இல.	விடை	பக்க இல.	வினா இல.	விடை	பக்க இல.
1	3	10/ 1	11	1	10/69	21	1	11/3	31	3	11/94
2	1	10/6	12	4	10/72	22	2	11/7	32	3	11/101
3	3	10/10	13	1	10/79	23	1	11/12	33	2	11/108
4	2	10/17	14	3	10/94	24	3	11/21	34	4	11/111
5	2	10/26	15	3	10/109	25	4	11/30	35	2	11/122
6	3	10/28	16	4	10/115	26	3	11/48	36	4	11/132
7	3	10/34	17	2	10/117	27	4	11/65	37	1	11/133
8	1	10/37	18	3	10/126	28	2	11/76	38	3	11/135
9	4	10/54	19	1	10/137	29	1	11/89	39	1	11/140
10	3	10/62	20	2	10/143	30	2	11/90	40	1	11/143

பகுதி 11

1. பழமொழிகள் ,அறிவுரைகள் , கற்பனைகள் , பாடல்கள் (தரம்10 – 20)

2. சிறையிலிடப்படல் , கல்லால் எறியப்பட்டு நகருக்கு வெளியே இழுத்துக்கொண்டு போகப்படுதல் , யூதர்களின் எதிர்ப்பிற்கு ஆளாகுதல் (10 – 33)

3. மத்தேயு , மாற்கு ,லூக்கா (10 – 63)

4.அருள் நிறைமரியே செபத்தைச் சொன்னார் , பாடல்களைப் பாடினார் (10 – 75)

Past Papers Wiki

5. இலங்கை அன்னையின் பெருவிழா , பரிசுத்த திரித்துவத்தின் பெருவிழா ,தூய நற்கருணைத் திருவிழா , சகல புனிதர்களின் பெருவிழா , இறந்தவர்களை நினைவு கூரும் தினம் , கிறிஸ்து அரசர் பெருவிழா (10 – 126)

6. மாற்கு – சிங்கம் , யோவான் - கழுகு (11 – 17)

7. 3 - கொசுக்களின் தொல்லை

6- கொப்புளங்கள் தோன்றுதல் (11 - 36

8. இயேசுவின் திருமுழுக்கின் போது , மரியாளின் வயிற்றில் இயேசு அவதரிததபோது (11 - 54

9. அறிவற்றோருக்கு கற்பிப்பது

ஐயமுற்றோருக்கு நம்பிக்கை ஊட்டுவது

துன்பப்படுவோருக்கு ஆறுதல் அளிப்பது

பாவிகளை மனந்திருப்புவது (11 – 117)

10. காலை – சக்கரியாவின் புகழ்ச்சிப் பாடல் , மாலை – மரியாவின் புகழ்ச்சிப் பாடல் (11 – 139)

2) 1. நூல்களை எழுதியமை , நாட்டியக் கலை , சங்கீதக் கலை (10 – 50)

2. சில்வெஸ்டர் ஆசீர்வாதப்பர் சபை , அமலமரித் தியாகிகள் சபை , இயேசு சபை , திருக்குடும்ப கன்னியர் சபை , நல்லாயன் கன்னியர் சபை (10 -51)

3. திருவிவிலிய வகுப்புக்களை நடாத்துதல்

மறைக்கல்வி வகுப்புக்களினூடாக பிள்ளைகளுக்கும் , வாரத்தில் ஒருநாள் இளைஞர்களிற்கும் , வளர்ந்தோருக்கும் திருவிவிலிய வகுப்புக்களை நடாத்தி திருவிவிலிய அறிவை வழங்குதல்

பங்குமட்டத்தில் திருவிவிலிய வினாவிடைப் போட்டிகளை நடாத்துதல்

நாடகங்கள் , திரைப்படங்கள் மூலம் சமய விழ்ப்புணர்வை ஏற்படுத்துதல் (இது போன்ற விடைகளிருப்பின் புள்ளிகள் வழங்கவும்)

3) 1. என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. (10 – 79)

ஓய்வு நாளை தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு (10 – 87)

11. இறைவனுக்கு ஆராதனை செய்தல்

இறைவனுக்கு நன்றி கூறுதல்

பாவங்களிற்கு பரிகாரம் செய்தல்

ஆன்ம , உடல் தேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல் (10 – 88)

111. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் திருப்பலியில் பங்கு கொள்ளல்

பிள்ளைகளை மறைக்கல்விப் பாடசாலைக்கு அனுப்புதல்

PAST PAPERS WIKI

ஆன்மீக , உடல் சார்ந்த இரக்கச் செயல்களில் ஈடுபடச் செய்தல்

பங்கிலுள்ள பக்திச்சபைகளில் ஈடுபடல்

நோயாளர்களை , அநாதை இல்லங்களைப் பார்வையிடச் செல்லல்

4) 1. திருப்பலி , அருளடையாளங்கள் , திருப்புகழ்மாலை (10 – 122)

2. திருவருகைக்காலம், நத்தார் காலம் , பொதுக்காலம் , தபக்காலம் , பாஸ்கா காலம் (10 – 123)

3. பொருத்தமான மண்றாட்டுக்கள் 5 எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்

5) 1. கீழ்ப்படிவு , குருத்துவத் தூய்மை (11 – 85)

11. திருப்பலியிலும் திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் இறைவார்த்தையைப் போதித்தல்

திருப்பலியிலும் , வேறு திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் ஆயருக்கும் குருக்களுக்கும் உதவுதல்

திருமுழுக்கு வழங்குதல்

மரணச்சடங்குகளை நடாத்துதல்

திவ்விய நற்கருணை ஆசீர்வதித்தல்

திருமணச்சடங்கை நிறைவேற்ற உதவுதல் (11 – 86)

111. குருக்களுக்காக செபித்தல்

அவர்களிற்கு மரியாதை செலுத்துதல்

சமய சடங்குகளில் ஒத்துழைப்பு வழங்குதல்

அவர்களின் மறையுரைக்கு செவிசாய்த்து வாழ்வை வழப்படுத்திக் கொள்ளல்

அவர்களின் பணிகளை கௌரவித்தல்

6) 1. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் , மரியாயின் சேனை , இயேசுவின் திரு இருதய சபை (11 – 102)

11. சிறுவர்களிற்கு கற்றுக் கொடுத்தல்

நற்செய்தியை எடுத்துச் செல்லும் தூதுப் பணியில் ஈடுபடல்

செபமாலையினூடாக மரியன்னை பக்தியை வளர்த்தல்

வீடு சந்திப்பும் , தேவைகளை ஆராய்ந்து பார்த்தலும்

வைத்தியசாலைகளைத் தரிசித்தலும் நோயாளர்களைச் சந்தித்தலும் (11- 102)

7) 1. 10- 28

2. 10 – 72

3. 11 – 120

4. 11 - 57

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library